பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : கார்த்திகை 10 (25—11—68) திங்கள் ★ வெளியூர் : கார்த்திகை 11 (26—11—68) செவ்வாய் [இதழ் : 133

பின்தங்கிய நாடுகட்கு உலக பாங்கி தரும் கடன்

வட்டி விகிதம் உயரக்கூடும்

கராச்சி, நவ. 25—

பின்தங்கிய நாடுகளுக்கு அளிக்கப்படுகிற கடன்களுக்கு வட்டி விகிதத்தை, உலக பாங்கி உயர்த்தக்கூடும்.

வட்டி விகிதம் 6·5 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதத்திற்கு உயர்த்தப்படக்கூடும்.

வரி போட்டு மேலும் ஏழை மக்களை வாட்டமாட்டோம்!

பரிசுச்சீட்டு மூலம் கிடைக்கும் பணம் நலன் தரும் திட்டங்கட்குப் பயன்படுத்தப்படும்

ஆரணியில் அமைச்சர் சாதிக் பாட்சா விளக்கம்

ஆரணி, நவ. 25—

"குடிநீர்த் திட்டத்துக்காக ரூ. 1,000 கோடி தேவைப்படுகிறது ; திட்டங்களை நிறைவேற்ற வரி போட்டால்தான் முடியும் ; ஏற்கனவே மத்திய அரசும் -- மாநில அரசும் வரிகளைப் போட்டுவிட்டன ; மேலும் வரிகளைப் போட்டு ஏழைகளைப் பாதிக்குமாறு செய்யமாட்டோம் ; தமிழக அரசு ஏழைகளின் அரசாகும்.

"ஏழைகளுக்காகவே பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கொண்டுவந்தோம் ; அது பற்றி நாங்கள் சட்டமன்றத்தில் விளக்கிக் கூறும்போது எதிர்க் கட்சியினர், 'இந்தத் திட்டம் உருப்படாது' என்று குறை கூறினர் ; ஆனால் இன்றோ திட்டத்திற்கு எல்லோரிடமும் ஏராளமான ஆதரவு இருக்கிறது.

"இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ரூ. 1 கோடிதான் வருமானம் கிடைக்கும் என்று கருதினோம் ; ஆனால், ரூ. 3 கோடிக்கு வருமானம் கிடைக்கும் என்று புள்ளிவிவரக் கணககுகள் கூறுகின்றன ; இந்த வருமானத்தில் பாதியை மருத்துவ வசதிக்கும், மீதியை குடிநீர்த் திட்டத்திற்கும் செலவிடத் தமிழக அரசு எண்ணியிருக்கிறது"

இவ்வாறு நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், ஆரணியை அடுத்த கலசப்பாக்கம் ஊராட்சியின் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் விளக்கிக் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

மருத்துவமனைகளை அரசே ஏற்று நடத்தும் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஊராட்சி ஒன்றிப்புகளாலும் நடத்தப்படும் மருத்துவமனைகளையும் அரசே ஏற்று நடத்துவது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது ; இதற்காக ஆண்டுதோறும் ரூ. 50,000 செலவாகும் ; ஆனால் அரசுக்கு இப்போது பணமுடையாக இருப்பதால், எல்லா மருத்துவமனைகளையும் ஏற்று நடத்தத் தயங்குகிறது ; எனவே, இந்த ஆண்டு 10 மருத்துவமனைகளை அரசு ஏற்று நடத்தும்.

ஊராட்சி ஒன்றியங்கள் நல்ல முறையில் பணியாற்றுகின்றன ; மேலும், வட்டார மக்களுக்காக ஒன்றியத்தலைவர்களும் ஊராட்சித் தலைவர்களும் முயன்று பல நல்ல காரியங்களை செய்ய முன்வர வேண்டும்.''

விழாவுக்குச் சட்டமன்ற உறுப்பினர் எஸ். முருகையன் தலைமை தாங்கினர்.

மற்றும் திருவண்ணாமலை வருவாய்த்துறை அதிகாரி என். அனந்தராமன், மாவட்டக் கல்வி அதிகாரி எம். கே. முகமதுபாட்சா முதலியோரும் கலந்துகொண்டனர்.

'நவசக்தி'யின் விஷமத்தனம்

அமைச்சர் சாதிக் பாட்சா மறுப்பு

சென்னை, நவ. 25—

"திருவண்ணாமலைக்கு நான் சென்றபோது தி. மு. கழகத்தினர் என்னை வரவேற்க வரவில்லை என்பதாக, 'நவசக்தி' இதழில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பானது''

என்று சுகாதாரத் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது :—

"நான் திருவண்ணாமலைக்குச் சென்றிருந்தபோது சுற்றுலா மாளிகையில் ப. உ. சண்முகம் எம்.எல்.சி', முன்னாள் நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் இரா. தர்மலிங்கம், மற்றும் பல கழகத் தோழர்களும் என்னை வரவேற்றனர்.''

சொந்தச் சிந்தனை--புதிய மனப்போக்கு தேவை

நமது மற்ற இன்னல்களைப் போலவே இயலாமை உணர்வும் கற்பனைதான் ; கெடுதல் நிறைந்த கற்பனையால் ஏற்படும் துயரைத் துடைக்கச் சொந்தச் சிந்தனையும், புதிய மனப்போக்கும் மட்டும் இருந்தால் போதும்.

—காந்தியார்

வரிப் பளுவை அதிகப்படுத்த வேண்டுமாம்

திட்டக் குழுத் துணைத் தலைவர் யோசனை

ஆமதாபாத், நவ. 24—

தற்போது மக்கள்மீது சுமத்தப்பட்டுள்ள வரிப் பளு போதாதென்று மேலும் பல புதிய வரிகளை விதிக்கச் சொல்கிறார் திட்டக் குழுவின் துணைத் தலைவர் டாக்டர் டி. ஆர். காட்கில்!

"வரி விதிப்பை அதிகப்படுத்துவது உட்பட, மேற்கொண்டு வருவாய் வசதிகளைப் பெருக்கிக கொள்ள மாநில அரசுகள் தவறிவிட்டால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறுவதில் இடர்பாடுகள் ஏற்படும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"வேளாண்மை மீதான வரி விதிப்பின் மூலம் மாநிலங்கள் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்'' என்றார் அவர்.

நாடு முழுவதற்கும் ஒரே வகையான வருமான வரி விதிக்கும் யோசனை கடந்த ஆண்டு நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் திட்டக் குழுவினால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினர் ; அந்த யோசனை இப்போது தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் கூறினர்.

'அரிய கருத்துக்கள் நிறைந்த உலக அறிவுப்பெட்டகம்'

'உண்மை நிலையை உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டுவதால் நிலைத்து நிற்கிறது'

திருக்குறளின் பெருமை --- டில்லித் தமிழ்ச் சங்க விழாவில் சவான் புகழாரம்; ஜாகீர் உசேன் பாராட்டு

டில்லித் தமிழ்ச் சங்கத்தினர், திருவள்ளுவரின் 2000-ம் ஆண்டு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினர் ; அதையொட்டித் திருவள்ளுவா படத் திறப்புவிழா நடைபெற்றது.

படத் திறப்பு விழாவில் உள்துறை அமைச்சர் சவான் கலந்துகொண்டு திருக்குறளையும், வள்ளுவரையும் பாராட்டிப் பேசுகையில குறிப்பிட்டதாவது :—

"திருக்குறள், வாழ்க்கையின் உண்மை நிலையை உள்ளது உள்ளபடியே எடுத்துக்காட்டுவதால்தான் -- நடைமுறைக்கு ஏற்ற கருத்துக்களைக் கூறுவதால்தான் -- அந்த அற நூல், காலத்தின் சோதனையையும் வென்று 2000 ஆண்டுகள் ஆகியும் நிலைத்து நிற்கிறது''

தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு மலரான 'சுடர்' இதழையும் அவர் வெளியிட்டார்.

குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன், துணைக் குடியரசுத் தலைவர் வி.வி. கிரி, தலைமையமைச்சர் இந்திரா காந்தி மற்றும் அமைச்சர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

வாழ்த்துச் செய்தியில் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன், திருக்குறளைப் பாராட்டிக் கூறியிருப்பதாவது :—

"திருக்குறள், அரிய கருத்துக்கள் நிறைந்த உலக அறிவுப் பெட்டகம்; நீண்ட நாட்களுக்கு முன்பு எழுதப்பட்டதாக இருந்தாலும், என்றுமே புதிய கருத்துக்களைக் கொண்டதாக இருந்துவருகிறது.

"திருக்குறளில் எழுதப்பட்டிருக்கும் கொள்கைகள், அந்த நாட்களைப் போலவே இன்றும் பொருத்தமான கருத்துக்களாக விளங்கிவருகின்றன ; அது என்றும் புதுமைமிக்கது; அன்றுபோல் இன்றும் அன்பும் வாய்மையும் கற்பிக்கும் அதன் கருத்துக்கள், ஏற்கத்தக்கவைகளாக உள்ளன.''

தமிழ் நாடு பெயர் மாற்றம்

டிசம்பர் முதல் நாள்

நாடெங்கிலும் விழா எடுப்பீர்!

தமிழக அரசு, 'சென்னை மாநில'த்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்ட வேண்டும் என நிறைவேற்றிய தீர்மானத்தை டில்லி நாடாளுமன்றத்தில் ஒருமனதாக ஒப்புக்கொண்டு, நீண்டநாளைய தமிழர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றியமைக்காக மகிழ்ச்சி தெரிவிக்கும் விதத்தில், நாடெங்குமுள்ள கழக அமைப்புகள், டிசம்பர் 1-ம் நாள் ஞாயிறு அன்று சிறப்பான முறையில் விழா எடுத்துக் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்பன்,
அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி.மு.க.

சென்னை மாநகர வளர்ச்சித் திட்டம்

உலக பாங்கியிடம் கடன் கோரிக்கை

செய்தியாளர்களிடம் மேயர் விளக்கம்

சென்னை, நவ. 25—

மேயர் வேலூர் டி. நாராயணன் உலக பாங்கியின் தலைவர் இராபர்ட் மக்நமாராவைச்சந்தித்து நகர மக்கள் தேவைகளைப் பற்றிய திட்டங்களை அளித்தார்.

நகரில் தெருவிளக்குகளைச் சீர்செய்வது இத்திட்டங்களில் ஒன்று என்றும், இதற்குச் சுமார் ரூ. 5 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்படுவதாகவும் மேயர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

முக்கியமான சந்திப்புகளில் மேம்பாலங்களும், நடைபாதைப் பாலங்களும் அமைப்பது மற்றொரு திட்டம் ; இதற்கு ரூ. 5-கோடி செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது என அவர் குறிப்பிட்டார்.

"இத்திட்டங்களுக்கு உலக பாங்கியிடமிருந்து உதவி கிடைக்குமானல் மத்திய அரசும் -- மாநில அரசும் உலக பாங்கிக்கு உத்தரவாதம் தரவேண்டியிருக்கும்'' என்றும் கூறினர்.

விவசாயம் - மின்சாரத் துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்

கைத்தறித் துணியின் வளர்ச்சியில் தனி அக்கறை செலுத்தப்படும்

தமிழ்நாட்டின் நான்காவது திட்டம் பற்றி விளக்கம்

சென்னை, நவ. 25—

தமிழகத்தின் நான்காவது திட்டத்தில் விவசாயம், மின்சாரம் ஆகிய துறைகளுக்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும்.

தீவிர சாகுபடி முறைகளைக் கையாளுவதன் மூலமும் பூமிக்குக் கீழுள்ள ஊற்று நீரை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளுவதன் மூலமும் உணவு உற்பத்தியில் 25 சதவிகித அதிகரிப்பு காணப்படும்; அதாவது 79 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்படும்.

தமிழகத்தின் நான்காவது திட்டத்தின் பொதுவான அம்சங்களை விவரிக்கும் வெளியீடு ஒன்று உலக பாங்கி தலைவர் மக்நமாராவிடம் தரப்பட்டது; அதில் இந்த விவரங்கள் காணப்படுகின்றன. இந்த வெளியீட்டில் காணப்படும் பிற முக்கியமான அம்சங்கள் வருமாறு :—

70,000 சாதாரணக் கிணறுகள், 10,000 குழாய்க் கிணறுகள், 10,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் வெட்டப்படும்.

நான்காவது திட்டக் காலத்தில் புதிதாக 2.5 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புத் தரப்படும்.

தவணை -- கிரயத் திட்டப்படி 1,500 டிராக்டர்கள் தரப்படும்.

இதைத் தவிர, விவசாயத் துறையிடமுள்ள டிராக்டர்கள் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும்.

நில வளர்ச்சிப் பாங்கிகள் வெளியிடும் டிபஞ்சர் பத்திரங்களை, அரசு ரூ. 17 கோடிக்கு வாங்கும்.

விவசாயச் சார்புத் தொழில் கார்ப்பரேஷன் விரிவான அடிப்படையில் அமைக்கப்படும்.

சாகுபடிக்கு இலாயக்கான நிலம் குறைவாயிருப்பதால், அதைச் சார்ந்திருப்பவர்களுக்குத் தொழிற் துறையில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் பொருட்டு, இன்னும் அதிகத் தொழில் வளர்ச்சிக்கு வகை செய்யப்படும்.

கடலாடி மீன்பிடித் தொழிலில், தனியார் துறையினர் பங்கு கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

கைத்தறித் துணி பிற துணிகளுடன் போட்டியிடக்கூடிய விதத்தில் வளருவதற்காகத் தனித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இரசாயன மருந்து உற்பத்தித் துறையில் புதிதாக பல முயற்சிகள் தொடங்கப்படும்.

ஐந்தாவது திட்ட இறுதியில் விசை உற்பத்திக்கும் -- விசைத் தேவைக்குமிடையில் எதிர்பார்க்கப்படும் இடைவெளியைத் தவிர்ப்பதற்குத் விசை உற்பத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

முதல் மூன்று திட்டங்களின் போது தமிழகம் மேற்கொண்ட முயற்சிகள் இந்த வெளியீட்டில் எத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

நான்காவது திட்டத்துக்கு என்ன செலவாகும் -- பல்வேறு துறைகளுக்கு எவ்வளவு ஒதுக்கப்படும் என்பது போன்ற நிதி பொறுப்புகள் பற்றிய தகவல்கள் இந்த வெளியீட்டில் தரப்படவில்லை.

மத்திய திட்டத்தைக் காபியடிக்கும் அளவில் இம்மாநிலத்தின் திட்டம் இருக்காது என்றும், மாநிலத்தின் தேவைகளை இன்னும் அதிக அளவில் பிரதிபலிப்பதாக இருக்குமென்றும் இந்த வெளியீடு கூறுகிறது.

"எலெக்ட்ரானிக்ஸ், பிளாஸ்டிக், நுண் இரசாயனப் பொருள்கள், மருந்துகள், சாயப் பொருள்கள், உரம், பழங்களைப் பதப்படுத்துதல் முதலிய துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்" என்றும் இந்த வெளியீடு கூறுகிறது.

கல்வித் துறையில் ஏற்கனவே விரிவு ஏற்பட்டுள்ளது; இனி தர உயர்வில் கவனம் செலுத்தப்படும்.

இயற்கையைக் கெடுக்கின்றனர்

விஞ்ஞானி எச்சரிக்கை

மனிதன் இயற்கையைக் கெடுக்கும் செயல் உலகம் நெடுகிலும் வரவர அதிகக் கவலையை உண்டு பண்ணியுள்ளது.

இந்தப் பூமி இன்னும் வாழத் தகுந்த இடமாக இருக்கவேண்டுமானால் ஏற்ற முயற்சிகள் எடுத்தாக வேண்டுமென்று அமெரிக்கா முதலிய பல நாடுகளின் விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

பிரச்சினை எவ்வளவு கடுமை என்பதை அண்மையில் பாரிசில் கூடிய 62 நாட்டு மாநாடு ஒன்று அலசி ஆராய்ந்தது.

'யுனெஸ்கோ' எனப்படும் ஐ. நா.-வின் கல்வி - விஞ்ஞான - பண்பாட்டுக் கழகத்தின் பாரிஸ் தலைமையகத்தில் 10 நாட்களாக மாநாடு நடந்தது; 240 பிரதிநிதிகள் வந்திருந்தனர்; அனைவரும், அவரவர் நாட்டு அரசாங்கத்தின் சார்பில் வந்திருந்த நிபுணர்கள்.

"உலகில் உயிரினம் வாழக்கூடிய பகுதியில் (உயிரியல் மண்டலத்தில்) உள்ள வளங்களை அறிவுடன் பயன்படுத்தப் பேணல்" என்பது பற்றி இந்த விஞ்ஞானிகள் மாநாட்டின் பத்து நாட்களும் ஆராய்ந்தனர்.

மாநாடு எவ்வகை நிலையில் கூட்டப் பெற்றுள்ளது என்பதை 'யுனெஸ்கோ' பின்வருமாறு எடுத்துரைத்தது :—

"பூமியில் மனிதன் தோன்றிய நாள் முதல் இல்லாத ஒரு நிலை இன்று ஏற்பட்டுள்ளது; 'உலகை அடக்கி ஆளுவதல்ல-- பேணுவதே கடமை' என்று மனிதனுக்கு முதல் தடவையாக உணர்த்தும் நிலைமை இது.

"தன் அளவறியாமல் செலவழித்துக்கொண்டே வாழ முடியாது என்ற உணர்வு அவனுக்குத் திடீரென்று இன்று ஏற்பட்டுள்ளது. யுகம் யுகமாகச் சேர்த்து வைக்கப்பெற்ற இயற்கை வளங்களைச் சில நூற்றுண்டுகளில் பயன்படுத்தித் தீர்த்து விடுதல் கூடாது என்ற உணர்வு தோன்றியிருக்கிறது.

"கழிவுப் பொருள் குப்பைகளை அவன் கண்டபடி குவிக்க முடியாது; அவனே அந்த அழுக்கு நாற்றத்தால் மூச்சுத் திணறுவான் அல்லது அடுத்தவனுடைய சூழ்நிலையை நச்சாக்குவான்."

மாநாட்டின் முடிவில் அவர்கள் 20 தீர்மானங்கள் நிறைவேற்றினர்; அத்தனையும் இவ்வுலகை மக்கள் வாழத்தக்க நன்னிலையில் வைப்பதற்கு ஏற்றவை.

ரெனே டுபாஸ்ட்டின் எச்சரிக்கை இது :—"இன்றையத் தொழில் நுட்ப நாகரிகத்தின் படைப்புகள் இவ்வளவு வேகமாக வந்து குவிகின்றன எனில் -- தக்க நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படாவிட்டால் -- இன்னும் பத்து ஆண்டுகளில் உலகின் மாநகர்களில் மனித வாழ்க்கைக்கு எள்ளளவும் இடமிராது; உலகில் உள்ளவர்களில் பாதிப் பேருக்கு மற்றப் பாதிப்பேர் மருத்துவம் செய்துகொண்டிருப்பார்கள்."

ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள் -- (6)

[எஸ். ஆர்.]

செய்யும் தொழிலே தெய்வம்!

கறுப்பும் சிவப்பும் சந்திக்கும் மாவட்டம் கோவை; அதாவது, கரிசல் மண்ணும் செம் மண்ணும் முறையே கால் பங்கும் முக்கால் பங்குமாக பரவியுள்ள பகுதிகளைக் கொண்டது.

மண் வளம் இல்லாத இம்மாவட்டத்து மக்களின் மன வளம் யாருக்கும் பின்தங்கியதல்ல! நீர்வளமில்லாத வயல்களை நிரம்பப் பெற்ற கோவை விவசாயிகளின் உழைப்பு வளம், கண்டு வியந்து அதனைப் பின்பற்றத் தக்க ஒன்றாக இருக்கிறது!

விண்வெளிக்குச் சென்று கிரகங்களின் நிலை பற்றி ஆய்ந்து வருவதுபோல், மண்ணைத் தோண்டி -- அதில் உள்ள பாறைகளை உடைத்து -- நூற்றுக்கணக்கான அடிக்குக் கீழே சென்று -- சில மணி நேரத்தில் காய்ந்து விடக்கூடிய மிகக் குறைவான நீர்நிலையைக் கண்டுபிடிக்க அவர்கள் காட்டும் உழைப்பு, ஏட்டில் எழுதிப் பாராட்டத்தக்க ஒன்று.

கிணறு தோண்டும் வேலை அங்கே ஒரு சில தலைமுறைகளுக்கும் தொடருகிறது; பல இலட்சங்களையும் விழுங்குகிறது. மண்ணில் சுரக்கும் நீரின் மதிப்பினை அறியவேண்டுமானால், கோவை மாவட்டத்தின் வானம் பார்த்த பூமிப் பகுதிகளுக்குச் சென்றால் புரியும்!

சுமார் 22 இலட்சம் ஏக்கர் விளை நிலங்களைக் கொண்டிருந்தும் அதில் ஏறக்குறைய ஏழு இலட்சம் ஏக்கர் மட்டுமே பாசன வசதிகளைப் பெற்றிருக்கிறதே என்பதற்காக இம்மாவட்டத்து மக்கள் சும்மா உட்கார்ந்துவிடவில்லை -- சோம்பி இருந்திடவில்லை. மொத்த மக்கள் தொகையில் 47 சதவிகிதத்தினர், தொழில் துறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளனர்.

கோவைப் பகுதிகள் 'தென்னகத்தின் மான்செஸ்டர்' என்றும், 'இந்தியாவின் டெட்ராயிட்' என்றும் அழைக்கப்படுகிறது.

வசதிக்கேற்ப வாழும் தொழிலை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்வதோடு நின்றுவிடவில்லை -- கோவை மாவட்ட மக்கள்; செய்யும் தொழிலில் காட்டப்படும் திறமையையே அவர்கள் செல்வமாக மதிக்கின்றனர்!

இம்மாவட்டத்தின் தொழில்துறை -- விவசாயப் பகுதிகளைக் காணுந்தோறும்,

> "செய்யும் தொழிலே தெய்வம்
> அதில் திறமைதான் எங்கள் செல்வம்"

என்ற பாரதியின் வரிகள்தான் காதுகளில் ஒலித்தபடி இருக்கின்றன!

மண் வளமும், நீர் வளமும் உள்ள பகுதிகள் குறைவுதான் என்றாலும், அந்தக் குறைந்த இடங்களிலும் மாநிலத்துக்கே ஓர் எடுத்துக் காட்டான விவசாய முறை கையாளப்படுவது கோவை மாவட்டத்தில்தான்!

அதுபோலவேதான் தொழில் துறையும். பம்பு செட், லேத் இயந்திரங்கள் போன்ற சில குறிப்பிட்ட துறைகளில், கோயமுத்தூர் சின்னம் பொறிக்கப்பட்ட பொருள்களுக்கு உள்ள மகிமையே தனிதான்; எடுத்துக்காட்டாக, பாசன வசதிக்குப் பயன்படும் மோட்டார் உற்பத்தியில் கோவை மாவட்டம் மட்டும் மொத்த இந்திய உற்பத்தியில் 30 சதவிகிதப் பங்கினைத் தந்துகொண்டிருக்கிறது!

அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி விரும்பி வலியுறுத்தும் பட்டம் பெற்ற விவசாயிகளை, கோவையில்தான் நிறைய காண முடிகிறது! அண்ணா அவர்கள் ஆசைப்படுவதுபோல் விவசாயத்தையும், மருத்துவம் -- சட்டம் -- பொறியியல் போன்று தொழில் துறைகளில் ஒன்றாகக் கருதும் மனப்போக்கும் இங்குள்ள மக்களின் உணர்வுகளில் உறைந்திருக்கக் காண்கிறோம்!

உதாரணத்துக்கு இதோ ஒன்று—படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்; முப்பது வயதுக்கும் குறைவானவர்; கோவை நகரிலிருந்து சில கல் தொலைவிலுள்ள வேடப்பட்டி என்ற கிராமத்தில் மாட்டுப் பண்ணை ஒன்றினை நடத்தி வருகிறார்; மாலை நேரங்களில் பொழுதுபோக்குக்காக என்று ஆரம்பிக்கப்பட்ட இததொழில், இப்போது இலாபத்தினையும், சுற்றுப்புற மக்களுக்குப் பலனையும் அளித்துவருவதாகக் கூறினார். சுமார் 400 மாடுகளைக் கொண்டிருக்கும் இப்பண்ணையில், 'ஜெர்சி', 'முர்ரா' வகைப் பசுக்களும் இருக்கின்றன. பால் விநியோகத்துடன் நல்ல ரகக் கால்நடைச் செல்வங்களை உற்பத்தி செய்யும் முக்கிய பணியும் இங்கு நடைபெறுகிறது. வசதி படைத்த இளைஞர்கள், இப்படிப்பட்ட பணிகளின் மூலம் மக்கள் சமூகத்திற்கு உதவலாம் என்பதற்கு வேடப்பட்டி பண்ணை ஓர் எடுத்துக்காட்டு!

வீடும் வயலும் இணைந்திருக்கும் காட்சியினை, நீர் வசதியுள்ள கோவைப் பகுதிகளில் நிறைய காணமுடிகிறது. 'Farm Houses' என்று சொல்லப்படுகின்ற -- மேனாட்டு முறையில் உள்ள -- 'வயல்வெளி வீடு'கள், மருத்துவம் -- சட்டம் போன்று விவசாயமும் ஒரு தொழில் ரீதியாக உணரப்பட்டு கடைபிடிக்கப்படுகிறது என்பதனை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

'தரவும் -- பெறவும்' என்ற கோட்பாடு, கோவை மக்களுக்கும் அரசாங்க இலாகாக்களுக்குமிடையே சிறந்து மிளிர்கிறது; தொழில் வசதிக்கு அரசினரிடமிருந்து எதை எதைப் பெற முடியுமோ அத்துணையையும் முழு அளவுக்குப் பெற்றுப் பயன்படுத்தவும் தவறுவதில்லை. அதே போல், அரசுக்கும் சமூகத்துக்கும் தங்கள் தொழில் துறைகள்மூலம் அளிக்கும் பங்கினைச் செவ்வனே செய்து முடிப்பதில் கோவை மாவட்டத்து மக்களின் உழைப்பும் ஆர்வமும் மற்றப் பகுதியினரும் பின்பற்ற வேண்டிய படிப்பினையாக இருக்கிறது.

'நாட்டின் முன்னேற்றத்துக்கு எங்களது சிறிய பணி' என்ற அடக்கமும் ஆர்வமும் மிக்க முயற்சியுடன் தனியார்களும் கூட்டுறவு நிர்வாகத்தினரும் ஆங்காங்கே நடத்திவரும் பொறுக்கு விதைப் பண்ணைகள் -- உர உற்பத்தி வகைகளும் கோவை மாவட்டத்தில் நிறைய இருக்கின்றன. துடியலூர் கூட்டுறவு விதை -- உர உற்பத்தி நிறுவனமும், 'கோயமுத்தூர் சீட்ஸ் கார்ப்பரேஷன்' என்ற தனியார் அமைப்பு ஒன்றும் எங்களால் பார்க்கப் பட்டது. விவசாயம் -- இயந்திரத்துறை-- இரண்டிலும் கோவை பீடுநடை போடக் காரணமாக அமைவதும் இதனால்தான்!

விளைநிலத்தில் உழைப்பதற்குக் கோவை மக்கள் இலாப -- நட்டம் பார்ப்பதில்லை. ஒரு மணி தானியத்தை உருவாக்குவதற்கு அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சி -- சாதனைகள் மகத்தானவை! அவர்களது வயல்வெளி வீடுகள் ஏதோ ஓர் அலுவலகம்போல் காட்சி தருகின்றன! அத்துணை செம்மை -- வரையறை அனைத்திலும்!

181 ஏக்கர் பரப்பளவில் பி. எஸ். ஜி. ஆர். சகோதரர்களால் நடத்தப்படும் ஒரு விவசாயப் பண்ணையை நாங்கள் பார்க்க நேர்ந்தபோது, வெறும் உணவுக்காக மட்டும் அவர்கள் அந்த நிலங்களைப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. 'நாட்டின் உணவுத் துறைக்கு அது ஒரு சேர்க்கை -- விவசாய ஆராய்ச்சிகளுக்கு ஒரு சாதனம்' என்ற வகையிலதான் அது இருந்தது!

கரிசல் மண் -- பருத்தி இவை இரண்டினையும் மையமாக வைத்து மட்டும் கோவை மாவட்டத்து மக்களில் கணிசமான பகுதியினர் விவசாயத்திலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்பவர்களாக இருக்கின்றனர்.

நீர் வளமில்லாவிட்டாலும், கரிசல் வகையைச் சேர்ந்த மண் -- கடல் மட்டத்துக்கு 1,500 முதல் 2,000 அடிவரை உயரமான பூமி அமைப்பு -- ஆகிய இரண்டுமாகச் சேர்ந்து பருத்தி விளைச்சலுக்கும், அதிலிருந்து பஞ்சாலைத் தொழிலுக்கும உதவியளிக்கக்கூடிய வகையில் இருக்கின்றன.

1876-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தமிழகத்தின் பெருமைக்கு அணி சேர்க்கும் விவசாயக் கல்லூரி, கோவை நகரின் முக்கிய அங்கங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. ஆண்டொன்றுக்கு 160 பி.எஸ்சி., 48 எம்.எஸ்சி., 6 பிஎச்.டி. பட்டதாரிகளை உருவாக்கும் கல்லூரியின் முதல்வரிடம், இவர்களில் எத்தனைப்பேர் நேரடியாக வயல்வெளிக்கே சென்று தனிப்பட்ட வகையில் உழைக்கிறார்கள் என்று கேட்டபோது, 'சுமார் பத்து சதவிகிதத்தினர் மட்டுமே' என்றார் அவர்.

சாகுபடி செய்யக்கூடிய நிலங்களில் அதிக அளவு பயிரிடுவதிலும், பாசன நீரை அதிக அளவு பயன்படுத்துவதிலும் இந்தியாவிலேயே தமிழகம்தான் முன்னணியில் நிற்கிறது என்று பெருமைப்படும் முதல்வர் டாக்டர் பொன்னையா, விவசாயத்தில் இயந்திர வசதிகளைப் புகுத்துவது பற்றிக் கூறிய கருத்து என்னை வெகுவாகக் கவர்ந்தது :—

"விவசாயத்தை இயந்திரமயமாக்குவது பற்றி நாம் வீணான செயற்கை முயற்சிகள் மேற்கொள்ளத் தேவையில்லை; இயந்திரச் சக்தியைப் பயன்படுத்துவதைவிட மனித

(8-ம் பக்கம் பார்க்க)

கல்வி வளர்ச்சியில் தமிழகம் காட்டும் ஆர்வம்

ஈரோடு பள்ளிச்சீரமைப்பு மாநாட்டில் இரா. நெடுஞ்செழியன் பெருமிதம்

அரசுடன் முழு ஒத்துழைப்பு நல்க பொதுமக்களுக்கு வேண்டுகோள்

ஈரோடு, நவ. 20—

"எந்த ஒரு செயலிலும் பொதுமக்கள் உளப்பூர்வமாக ஈடுபட்டால்தான் அந்தச் செயல் முழுமை பெறும். சட்டத்தாலோ, உத்தரவாலோ காரியங்கள் நடைபெறுது -- தொண்டுள்ளத்தால்தான் நடைபெறும்,

"தமிழக அரசு தனது வருவாயில் பெரும் பகுதியைக் கல்விக்காகச் செலவிடுகிறது. அதே போன்று தனியார் துறையிலும் செலவிடப்படுகிறது. இவ்வளவு செலவிட்டும் நாட்டில் கல்விப் பசி தணியவில்லை -- அதன் தேவைகளும் குறையவில்லை"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இங்கு பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார்.

இங்குள்ள கலைமகள் கல்வி நிலைசத்தில் ஈரோடு சரகப் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடைபெற்றது; கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமைதாங்கினார்.

பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுப் பொதுச்செயலாளரும் மாவட்டக் கல்வி அதிகாரியுமான சிவப்பிரகாசம் அறிக்கை அளித்தார்.

இந்த சீரமைப்பு மாநாட்டில் ஈரோடு சரகத்தைச் சார்ந்த 194 துவக்கப் பள்ளிகளும், 36 நடுத்தரப் பள்ளிகளும், 17 உயர்நிலைப் பள்ளிகளும், 3 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் கலந்துகொண்டன.

சீரமைப்பு மாநாட்டின் வாயிலாக உயர்நிலைப் பள்ளிகளுக்கு நன்கொடையாக அளித்துள்ள பொருள்களும், அவற்றின் மதிப்பும வருமாறு:—

கட்டட வகையில் ரூ. 1,31,114 தளவாடச் சாமான்கள் வகையில் ரூ. 1,27,812 பயிற்சிக் கருவிகள் வகையில் 81,133; நூல் நிலையப் புத்தகங்கள் வகையில் ரூ. 536; மருத்துவ ஊர்தி வகையில் ரூ. 35,000 — ஆக மொத்தம் ரூ. 4,16,895 கிடைத்துள்ளது.

துவக்கப் பள்ளிகளுக்காக அளிக்கப்பட்ட நன்கொடைகள், பொருள்களின் மொத்த மதிப்பு ரூ. 1,00,750 ஆகும்.

இந்தச் சீரமைப்பு மாநாட்டின் மூலம் கிடைத்த நன்கொடைகள் பொருள்கள் கருவிகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பு ரூ. 5,77,654.

இது தவிர 4,050 பள்ளிப் பிள்ளைகளுக்கு ரூ. 41,000 மதிப்புள்ள சீருடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:—

"கல்வி வளர -- கல்வியின் பாங்கு வளர -- கல்விக்கூடங்கள் வளர கட்டிடங்கள், பொருள்கள், கருவிகள், நன்கொடைகள் வழங்கிய பொது மக்களுக்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்கள் பள்ளிச் சீரமைப்புத் திட்டத்திற்கு நல்லாதரவு நல்கியதன் காரணமாக இதுவரை சுமார் ரூ. 10-கோடியிலிருந்து ரூ. 11 கோடி மதிப்புள்ள இடங்கள், கட்டிடங்கள், பொருள்கள் கிடைத்துள்ளன.

தமிழக அரசு இரண்டே இரண்டு காரியங்களுக்குத்தான் மக்களிடம் நன்கொடை கேட்க முடியும்; ஒன்று—கல்விக்காகவும், இரண்டு—மருத்துவத்திற்காகவும்தான்.

மக்கள் பல காரியங்களுக்காக நன்கொடை வழங்குகிறார்கள்; அப்படிப்பட்ட மக்கள் கல்விச் சாலைகளுக்கு வழங்கினால், அவர்களுடைய பெயர் நீண்ட நெடுங்காலத்திற்கு நிலைத்து நிற்கும்.

நல்ல மார்க்குகள் வாங்கியும் -- மேற்கொண்டு படிக்க வேண்டுமென்ற ஆசையிருந்தும் -- வசதியின்மையால் மேற்கொண்டு படிக்க முடியாத நிலையிலுள்ள ஏழை மாணவர்களுக்கு உதவ மக்கள் முன்வர வேண்டும்.

அரசின் உதவிப் பெற்றுப் படித்து -- அதன்மூலம் முன்னேற்றமடைந்தபிறகு, 'நாம் எப்படி எதனால் இந்த நிலைக்கு வர முடிந்தது' என்று சிந்தித்துப் பார்த்து -- அப்படிப்பட்டவர்கள், கல்வி வளர்ச்சிக்காகத் தங்கள் வருமானத்தில் ஒரு சிறு பகுதியாவது கொடுத்துதவ வேண்டும்.

அறிவியல் கல்வி வளர்ந்தால் தான் நாடு முன்னேறும்; நாட்டில் அறிவியல் கல்வி வளரும் அளவில் உதவுவதற்குப் பொது மக்கள் முன்வர வேண்டும்.

'என்ன படித்தார்' என்பதோ, 'எவ்வளவு படித்தார்' என்பதோ முக்கியம் அல்ல; 'படித்த படிப்பை எப்படிப் பயன்படுத்துகிறார்' என்பதுதான் முக்கியம். படிப்பவர்கள் இதைக் கருத்தில் கொண்டு நடக்க வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழக ஆசிரியர்கள் தான் சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறார்கள்.

அதே நேரத்தில், 'பள்ளிகளுக்கு வாரத்தில் இரண்டு நாட்களுக்கு விடுமுறை தேவையா -- ஒரு நாள் போதாதா என்பதையும் ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இது எனது உத்தரவோ, அல்லது சட்டமோ அல்ல; வெறும் வேண்டுகோள்தான். இதுபற்றி ஆசிரியர்கள் நல்ல முறையில் சிந்தித்துப் பார்த்துத் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டுகிறேன்."

மாநாட்டிற்கு வந்திருந்தவர்களை கலைமகள் கல்வி நிலையப் புரவலர் எஸ். மீனாட்சிசுந்தரம் வரவேற்றார்.

பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுக் குழுத் தலைவர் மா. சுப்பிரமணியம் அமைச்சருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்ததோடு, மாலைக்குப் பதிலாகப் புறநானூற்று நூலையும் வழங்கினார்.

பள்ளி ஆய்வாளர் செங்காட்டு வேலப்பன் நன்றி கூறினார்.

மாநாட்டிற்கு அமைச்சருடன், ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் மு. சின்னசாமியும், மாவட்டச் செயலாளர் செ அ. இராசமாணிக்கமும் வந்திருந்தனர்.

துரிஞ்சாபுரத்தில் அதிகவிளைச்சல்திட்டம்

மகளிர் நல சிறப்பு விழா

துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில், 16—11—68-ல், மகளிர் நலத் துறையினர் சார்பில் அமோக விளைச்சல் திட்ட விழா, ஊராட்சி ஒன்றியத் துணைப் பெருந்தலைவர் பெ. க. திருவேங்கடம் தலைமையில் சிற பாகக் கொண்டாடப்பட்டது. வட ஆற்காடு மாவட்ட மகளிர் நல அதிகாரி எஸ்தர்பிச்சை, டி. எஸ். ஆனந்தராவ், ஏ. ஆரோக்கியதாஸ், டி அருணாசலம், ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு அமோக விளைச்சல் திட்டத்தின் நோக்கங்கள் -- மகளிர் மன்றங்கள் புதிய முறையில் உணவுப் பொருட்களைத் தயாரிக்க வேண்டிய கடமைகள் ஆகியவை பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

புதிய முறையில் மக்காச் சோளத்தில் சிற்றுண்டிகள் தயாரிக்கப்பட்டு, அதுபற்றி விளக்கப்பட்டது. திருமதி கௌசல்யா நன்றி கூறினார்.

கட்டபொம்மன் பரம்பரையினருக்கு உதவிப் பணம் இல்லை

டெல்லி அரசு கைவிரிப்பு

புதுடில்லி, நவ. 25—

வீரபாண்டிய கட்டபொம்மன் பரம்பரையினருக்கு டெல்லி அரசு உதவிப் பணம் கொடுத்துவந்தது; கடைசியாக உதவிப்பணம் வாங்கி வந்தவர் இயற்கையெய்திவிட்டதால், 1958-ம் ஆண்டு ஜுன் திங்கள் முதல் உதவிப் பணம் நிறுத்தப்பட்டுவிட்டது.

ஆனல், 'தொடர்ந்து உதவிப் பணம் தரவேண்டும்' என்று கடைசியாக இறந்தவரின் மூத்த மகன் கோரினார்; இதுபற்றி நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு, உள்நாட்டுத்துறை அரசாங்க அமைச்சர் வி சி. சுக்லா கூறியதாவது:—

"இனிமேலும் கட்டபொம்மன் பரம்பரையினருக்கு உதவிப் பணம் தரமாட்டோம்; ஏனெனில், அவர்களுக்கு உதவிப் பணம் தருவதை அடியோடு நிறுத்துவது என்று 1958-ம் ஆண்டிலேயே அரசு முடிவு செய்துவிட்டது."

கொள்ளைச் சம்பளம் வாங்குவோர் தொகை

ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பு

புதுடில்லி, நவ. 25—

இந்தியாவில் மாதம் ரூ. 5,000-மும் அதற்கு மேலும் ஊதியம் பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

குறிப்பாக அந்நியருக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களில் பெரும் ஊதியம் பெறும் இந்தியர்கள், அந்நியர்கள் எண்ணிக்கை பல்கிப் பெருகி வருகிறது.

இந்தத் தகவலை மெய்ப்பிக்கும் புள்ளிவிவரங்கள் வருமாறு:—

1964-ம் ஆண்டில் ரூ. 5,000 ஊதியம் பெற்ற அந்நியர் 815 பேர் -- இந்தியர் 165; அடுத்த ஆண்டு அவர்கள் தொகை 837 ஆகவும், 222 ஆகவும் கூடியது.

1966-ல் அந்நியர் தொகை 859; இந்தியர் தொகை 283.

அதற்கு அடுத்த ஆண்டு (1967) அந்நியர் எண்ணிக்கை 1,072 ஆகவும், இந்தியர் எண்ணிக்கை 371 ஆகவும் உயர்ந்தது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியைப் பயன்படுத்துவது அதிகச் செலவாகக்கூடியது என்று உணர்ந்த மறுகணம் இந்திய விவசாயம் இயந்திரமயமாகிவிடும்"

என்ற அவரது கருத்தில், எள்ளளவு ஐயப்பாடும் இருக்க நியாயமில்லை.

"பருப்பு வகைகளில் அமோக விளைச்சலைத் தரக்கூடிய வகைகள் இனிதான் கண்டுபிடிக்கப்பட வேண்டும்" என்று அவர் கூறியபோதுதான், பருப்பு வகைகளுக்கு அவ்வப்போது இருந்துவரும் பற்றுக்குறை -- விலை வீக்கம் போன்ற நடப்புகளுக்கான காரணம் புரிந்தது.

அவரையையும் -- மொச்சையையும் இணைத்துப் புதுவகைப் பருப்பு ஒன்றினையும் உருவாக்கக் கோவைக் கல்லூரி முயன்று வருவதாகவும் அப்போது எங்களுக்குத் தெரியவந்தது!

"நெல் வகைகள் மட்டும் உலகின் 29 நாடுகளில், '2656' பெயர்களில் இருந்துவருகின்றன" என்பன போன்ற அவரது புள்ளி விவரங்கள், கருத்துக்கும் கவனத்துககும் உரியனவாக இருந்தன!

★

'இதோ வந்துவிட்டார்கள்' என்று கூவியபடி கிராமத்துப் பெரியவர்களும், சிறுவர்களும் எல்லையிலிருந்து எங்கள் பஸ்ஸைப் பார்த்ததும் ஓடிவரத் தொடங்கினார்கள்,

தொண்டாமுத்தூர் ஒன்றிப்பு முத்தியாபாளையம் சீரணியினரால ஆழப்படுத்தப்படவிருக்கும் குட்டைச் சீரமைப்பு வேலை எங்கள் வருகையையொட்டித் துவக்கப்பட இருந்ததுதான், எங்களுக்காக அவர்கள் காத்திருந்ததாகும்.

மேடை மீதிருந்து பேசுபவர்களின் பேச்சை, கீழே அமர்ந்தே குறிப்பெடுத்துப் பழகிய செய்தியாளர்கள், வரவேற்பளிக்கப்பட்டு மேடையில் அமர்த்தப்பட்டனர்; அதுமட்டுமல்ல; தூர் எடுப்பு வேலையை முறையாகத் துவக்கிவைத்த பெருமையும் எங்களில் ஒருவருக்குக் கிடைத்தது! எதை யாரிடம் ஒப்படைத்தால் சரியான 'விளம்பரம்' கிடைக்கும் என்று அறிந்து -- அதைச் செவ்வனே செய்து முடித்திருந்த முத்தியாபாளையம் சீரணியினர் பாராட்டப்பட வேண்டியவர்களே!

★

சென்னைச் செய்தியாளர்களுக்கு திரு. பாங்கோ புதியவர் அல்லர்; புதியவர்களிடமும் அவர் பழகும் முறை, ஏற்கனவே பழகியது போலவே இருக்கும். கோவை மாவட்டச் சுற்றுப்பயணத்தின்போது இருமுறை நாங்கள் அவர் தந்த விருந்தில் கலந்துகொண்டதற்குப் பதிலளிக்கும் வகையில்தானோ என்னவோ -- எங்கள் பஸ்சிலேயே பயணம் செய்து நிகழ்ச்சி ஒன்றிலும் கலந்துகொண்டார். கோவைக்கு அவர் மாற்றலாகிச சிலமாதங்களே ஆகின்றன. என்றாலும், எங்களுடன் அவர் பேசியவற்றை அனைத்தையும் வைத்துப் பார்க்கும்போது, மாவட்டத்தின் மூலை முடுக்குகளிலுள்ள புள்ளி விவரங்களையெல்லாம் மனப்பாடமாக வைத்திருக்கிறார் என்பது தெரியவந்தது.

'தமிழரல்லவே' என்று நாம் ஆங்கிலத்தில் பேசினால், அவராகவே முன்வந்து, தமிழுக்கே உரிய இனிமையுடன் தமது தன்மையினையும் இழைத்துத் தமிழில் பேசி நம்மைக் கவருவதில் வல்லவராக இருக்கிறார்!

அண்மையில், தமிழக அரசின் தலைமைச் செயலகத்திற்கு வந்திருந்த உலக பாங்கியின் தலைவர் மக்நமாரா கூறியதுபோல், 'அரசு அலுவலகங்களில் தமிழகம், மிக நேர்த்தியான இளைய பரம்பரையினரைப் பெற்றிருக்கிறது' என்பதற்கு, கோவை ஆட்சியாளர் போன்றவர்கள், தக்க எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர்! நகரின் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதில் திரு. பாங்கோ, தமது நேரத்திலும் உழைப்பிலும் பெரும் பகுதியினைச் செலவழித்து வருவதுடன், அக்குறையைப் போக்குவதைத் தமது தனிப்பட்ட கடமையாகவேகூட மதிப்பதாகத் தெரிகிறது.

சென்னை-34-ல் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் 213/68

பரம்பரை தர்மகர்த்தர்,
ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் மற்றும் பிரசன்ன
வெங்கடேசப் பெருமாள்
தேவஸ்தானம்,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

—மனுதாரர்

சென்னை-34 நுங்கம்பாக்கம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் மற்றும் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானம் விஷயமாக:—

மேற்படி தேவஸ்தானத்திற்குச் சொந்தமானதும் நுங்கம்பாக்கம் சர்வே எண் 467-ல் பிளாட் 8/ஏ கதவிலக்கம் 3/2 உள்ள 1026 சதுர அடி மனையின் மேற்படி மனையில் குடி இருந்துவரும் தற்போதைய குத்தகைதாரரான திரு. எம். முருகேச நாயகருக்கு மனை ஒன்று ரூ. 4 000 (நான்காயிரம் ரூபாய்) என விலையாக நிர்ணயம் செய்து விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருட இந்து சமய அறக் கட்டளைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு.

மனு எண் 213/68/டி1/
தேதி 15—11—68

மேற்படி மனு குறித்து சென்னையிலுள்ள தமது அலுவலகத்தில் 30—12—68 அன்று பிற்பகல் 2 மணிக்கு ஆணையர் அவர்களால் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளும் மறுப்புரைகளும் எவையேனும் இருப்பின் அவைகளை எழுத்து மூலமாக 28—12—68 அன்று அல்லது அதற்குமுன் இவ்வலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவைகளை நேரிலும் மேற்குறிப்பிட்ட இடத்திலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

அத்தாணியில் 'நாற்று நடுவிழா'

அலுவலர்கள் பங்கேற்றனர்

விவசாய வளர்ச்சிக்கும், விளைநிலங்களில் நல்ல மகசூல் கிடைக்கவும் பசுந்தாள் உரம் இன்றியமையாதது. அதற்கான முயற்சியின் முன்னேடியாக 'நாற்று நடுவிழா' அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அத்தாணியில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் கே. கே. சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது.

5,000-க்கும் மேற்பட்ட கிளைரிசீடியா நாற்றுகளை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அத்தாணி சீரணியினர், ஆணையர், மற்றும் விரிவு அலுவலர்கள், கிராம நல ஊழியர்கள், இதர ஊழியர்கள் அத்தாணியிலுள்ள வாய்க்கால் ஓரங்களிலும், புறம்போக்குகளிலும் ஒருநாள் முழுவதும் நட்டுத் தண்ணீர் விட்டனர்.

அத்தாணி ஊராட்சித் தலைவர்கள், துணைத் தலைவர், கூட்டுறவுச் சங்கத் துணைத் தலைவர் ஆகியோர் இந்த 'நாற்று நடுவிழா'வில் கலந்துகொண்டனர்.

விழாவுக்கான ஏற்பாடுகளை விவசாய வளர்ச்சி அலுவலர் டி. வி. உலகநாதன் செய்தார்.

இத்தகவலை அந்தியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு. டி. கே. வெங்கடாசலம் தெரிவித்தார்.

இராதாநல்லூர் கிளை நூலக 2-வது ஆண்டு நிறைவு விழா

இராதாநல்லூர் (இளையமுதுகூடம்) கிளை நூலக இரண்டாவது ஆண்டு நிறைவு விழா, 16—11—68-ல், ஊராட்சித் தலைவர் க. சின்னையா தலைமையில் நடைபெற்றது; திருவாளர்கள் இர. ஆ. கணேசநம்பி, அ கருணாநிதி, புலவர் சு. இராசமாணிக்கம் ஆகியோர் பேசினர்.

நூலக ஊழியர் அ. சின்னையன் நன்றி நவின்றார்.

நாம் ஆற்றவேண்டிய கடமையில் கவனம் செலுத்துவோம்

பகைவர்கள் பழி சுமத்துவது பற்றிப் பொருட்படுத்த வேண்டாம்

கழகத் தோழர்களுக்கு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அறிவுரை

சென்னை, நவ. 25—

"செய்யும் கடமையிலிருந்து நம்மைத் திசை திருப்பப் பகைவர்கள் நம்மீது பழிசுமத்துகின்றனர்—கையில் கிடைத்ததையெல்லாம் எடுத்து நம்மீது வீசுகின்றனர்! தோல்வியைத் தழுவிய ஆத்திரத்தால் அவர்கள், இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்—இதுபற்றிக் கழகத் தோழர்கள் கவலைப்படக் கூடாது.

"கடந்த ஒன்பதாண்டுக் காலமாக மாநகராட்சி மூலம் மக்களுக்கு நாம் செய்த தொண்டைவிட வேறு என்னென்ன இன்னும் செய்யமுடியும் என்பதில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டும். நம்மால் எத்தனையோ பிரச்சினைகள் நாட்டில் தீர்ந்திருக்கின்றன; குடிதண்ணீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக சென்னை நகரைப் பொறுத்தவரை இருக்கிறது; இதைத் தீர்க்கப் பாடுபட வேண்டும்.

"இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது; இந்தத் திட்டத்தில் ரூ. 600 கோடி தமிழகத்திற்காகச் செலவிடப்படவிருக்கிறது; இதில் சென்னைக்கு மட்டும் ரூ. 100 முதல் ரூ. 150 கோடி வரை ஒதுககவேண்டுமென்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நான்காவது திட்டம் தயாரித்து டில்லியுடன் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆகவே, மக்களுக்கு நன்மை செய்வதில்தான் நம் கவனம் இருக்கவேண்டுமே தவிர, காங்கிரசுக்காரர்கள் இப்படி வீண்பழி போடுகிறார்களே என்பதில் இருக்கக்கூடாது"

இவ்வாறு உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், சென்னை 79-வது வட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் கேட்டுக்கொண்டார். மேலும் அவர் சுட்டிக்காட்டியதாவது:—

"காங்கிரசு நண்பர்கள் ஏசுகிறார்கள் -- வீண் பழி சுமத்துகிறார்கள் என்று கழகத் தோழர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள்; அவர்கள் பழி கூறுவதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; பழிசுமத்தப்படுபவனுக்கு எந்தத் தீங்கும் வராது; பழி சுமத்துபவன்தான் ஒழிவான்!

ஆங்கிலக் கவிஞன் ஒருவன் உருக்கமாகப் பாடிய பாடல் ஒன்றின் கருத்து என் நினைவுக்கு வருகிறது—

"எங்கேயோ கூலி வேலை செய்து குடிசையில் வாழ்ந்தால் என்னைப் பற்றி எவனும் நினைக்கமாட்டான்; வயலை உழுது வாழும் உழவனாக இருந்தாலும் என்னைப் பற்றி எவனும் கருதமாட்டான்; ஆனால், இச்சமுதாயத்தில் நான் ஒரு முக்கியமான அங்கமாகிவிட்டேன்; என்னால் சில காரியங்களும் நாட்டில் நடைபெறவிருக்கின்றன; அதனால், வந்தவன் போனவன் எல்லாம் ஏசுகிறான்; வீண் பழியை அள்ளி வீசுகிறான்; அப்படி என்மீது வந்த கோபமென்ன? -- நான் செய்த தவறு என்ன? -- அழுந்திக்கிடந்து அவல நிலையுறும் இந்தப் பழைய சமுதாயத்தை மாற்றியமைக்கப் பாடுபடுகிறேன்; இதற்காக என்னைத் தாக்க முற்படுகிறான்; இது என்னைத் தாக்குவதாக அர்த்தமில்லை -- அவன் வாழ்க்கையை அவனாகவே தாக்கிக் கொள்ளப் பார்க்கிறான்"

என்று கூறினான்.

"அந்தக் கவிஞன் கூறியது போலத்தான் எதிர்த் தரப்பு நண்பர்களைப் பற்றி நாம் கூற வேண்டியதிருக்கிறது!"

வேளாண்மை அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

நவ. 27: காலை 9 மணி: வல்லம்—ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தைப் பார்வையிடல்; 10 மணி: தஞ்சாவூர்—தமிழ்நாடு கால்நடை உதவியாளர் சங்க நான்காவது மாநில மாநாட்டின் துவக்க விழாவில் கலந்து கொள்ளல்; மாலை 4 மணி: எடமலையூர்—ஊராட்சி பசுந்தாள் உரத தோட்டத் துவக்க விழா; 5-30 மணி: அசேஷம்—பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; இரவு 7 மணி: நீடாமங்கலம் — தாழ்த்தப்பட்டோர் நலத் திட்டத்தின் கீழ் கருவிகள் வழங்குதல.

நவ. 28: காலை 10 மணி: கண்டியூர்—விவசாயிகளைச் சந்தித்தல்; கோ-32 மாதிரிப் பண்ணையைப் பார்வையிடல்; 11 மணி: கபிஸ்தலம் — பெருமளவில் பூச்சி மருந்து தெளிப்பதைப் பார்வையிடல்.

நவ. 29: 8-30 மணி: திருத்துறைப் பூண்டி—விவசாயிகளைச் சந்தித்தல்; மாலை 4 மணி: மங்கநல்லூர்—விவசாயிகளைச் சந்தித்தல்; தேசிய விளக்கப் பண்ணையைப் பார்வையிடல்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

புதிய உணவுப் பங்கீட்டு அட்டைகள்

சென்னை நகரவாசிகள் கவனிக்க:

சென்னை, நவ. 25—

"ரேஷன் கார்டுகாரர்களுக்குக் கூப்பன் ஏற்பாடு, சனவரி மத்தியில் செயலுக்கு வரும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தெரிவித்தார்.

உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் விளக்கம்

உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளரின் செய்தி அறிக்கை வருமாறு:—

"தற்பொழுது நடைமுறையில் உள்ள உணவுப் பங்கீட்டு அட்டைகளைப் புதுப்பிப்பதற்கு முன்னதாக நகரத்தில் உள்ள குடும்பங்களைக் கணக்கிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நகரில் உள்ள உணவுப் பங்கீட்டுக் கடைகள் மூலமாக அட்டை வைத்திருக்கும் குடும்பத் தலைவர்களுக்குக் கணக்கெடுப்புப் பாரங்கள் 25—11—68 முதல் அரிசி வாங்கும்போது வழங்கப்படும்; அவ்விதம் பெற்றுக் கொண்ட பாரங்களை நிறைவு செய்து குடும்பத் தலைவர் கையொப்பமிட்டுத் தங்கள் வசமே தயாராக வைத்திருக்க வேண்டும்.

நிறைவு செய்யப்பட்ட பாரங்களை 1-12-68 முதல் 15-12-68-க்குள்ளாகச் சான்றிதழ் பெற்ற கணக்கெடுப்புப் பணியாளர் வீடுகளுக்கு வந்து பெற்றுக் கொள்வார்கள்; குடும்பத் தலைவரோ அல்லது குடும்பத்தைச் சேர்ந்த மற்றவரோ தயவு செய்து வீட்டில் இருந்து வீட்டுக்கு வரும் கணக்கெடுப்புப் பணியாளரிடம் தேவையான

(5-ம் பத்தி பார்க்க)

சமூகப் பணியில் இளைஞர்களின் பொறுப்பு

கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் வலியுறுத்தல்

சென்னை, நவ. 25—

"இளைஞர்கள் எந்தப் பணியையும் ஆக்கபூர்வமான முறையில் அணுகவேண்டும்; சுயநல சக்திகளிடம் அவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

"சமுதாயத்தில் மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்குச் சமூகப் பணிகள் வழிவகுக்கின்றன.

"சமூகப் பணி பெரிய நகரங்களில் செய்யப்படுகிறதா அல்லது சின்னஞ்சிறு கிராமங்களில் செய்யப்படுகிறதா என்பது முக்கியம் அல்ல; தொண்டுள்ளமே முக்கியமானதாகும். இளைஞர்களுக்கு அறிவுத் துறையிலும், உணர்ச்சி பூர்வமாகவும் பயிற்சி தருவதற்கு நம் நாட்டில் தொண்டுள்ளம மிக்க நிறுவனங்கள் மிக அவசியமாகும்"

இவ்வாறு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை சமூகப் பணிக்கான பள்ளியில் இளம தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியின் இறுதிநாள் விழாவில் பேசுகையில் வலியுறுத்திக் கூறினார்.

இந்தியா முழுவதிலுமிருந்தும் வரவழைக்கப்பட்ட 39 இளம் தலைவர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது.

சுமார் மூன்று வார காலம் பல்வேறு முக்கியமான தலைப்புகளில் சொற்பொழிவுகளும், விவாதங்களும் நடத்தப்பட்டன.

பயிற்சி பெற்றவர்களால் கட்டப்பட்ட இளைஞர் நிலையம் ஒன்று, சமூகப் பணிககான சென்னைப் பளளிக்கு அளிக்கப்பட்டது; அதனை, அமைச்சர் திறந்துவைத்தார்.

தாயகம் திரும்பினார் சத்தியவாணி முத்து

விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு

சென்னை, நவ. 24—

"பயணம் வெற்றிகரமாக அமைந்தது; நல்ல பல திட்டங்களைக் கண்டுவந்திருக்கிறேன்"

என்று இன்று தாயகம் திரும்பிய தமிழகத் தகவல்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து கூறினார்.

கடந்த அக். 27 அன்று வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட அமைச்சர் இன்று சென்னை திரும்பினார். ஏராளமான தோழர்கள் விமான நிலையத்தில் திரண்டிருந்து நல்வரவு கூறினர்.

அமைச்சர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சாதிக்பாட்சா ஆகியோரும், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளர் நீலநாராயணன், மேயர் வேலூர் நாராயணன், துணை மேயர் கோவிந்தசாமி, மாநகராட்சி தி.மு.க. கட்சித் தலைவர் வி. முனுசாமி முதலியோரும், மற்றும் பலரும் அமைச்சருக்கு மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவித்தனர்.

மருத்துவமனையில் பக்தவத்சலம்

முதலமைச்சர் அண்ணா--மற்றும் அமைச்சர்கள் கண்டனர்

சென்னை, நவ. 25—

சென்னை பொது மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் முதலமைச்சர் பத்தவத்சலம் அவர்களை, முதலமைச்ச அண்ணா, பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி, நலத்துறை அமைச்சர் சாதிக் பாட்சா, ஆகியோர் சென்று பார்த்து, உடல்நலம் பற்றி விசாரித்தனர்.

சி. சுப்பிரமணியம் மகள் திருமணம்

சென்னை, நவ. 25—

தமிழ்நாடு காங்கிரசு தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் மகள் திருமணம் நேற்று சென்னை ஆபட்ஸ்பரி மாளிகையில சிறப்பாக நடைபெற்றது.

திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் மகள் அருணாவுக்கும்—ஈரோடு டாக்டர் முததுசாமி அவர்களின் மகன் எல். எம். இராமகிருஷ்ணனுக்கும் நடைபெற்ற இத திருமண நிகழ்சசியில் முதலமைச்சா அறிஞா அண்ணா, அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், கருணாநிதி, மதியழகன, முத்துசாமி, பெரியார் ஈ. வெ. ரா., புரட்சி நடிகர் எம். ஜி. இராமசசந்திரன், மக்களவைத தலைவா சஞ்சீவியார், அ. இ. காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா, காமராசர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கலந்துகொணடு மணமக்களை வாழ்த்தினர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

27--11--68

அந்தியூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: கே. எஸ். காளியப்பன; பேசுவோர்: கோவை மு. இராமநாதன், ஜி. பி. வெங்கிடு எம.சி., ஈ. எம. நடராசன எம.எல்.ஏ., அ. வெற்றிவேல், அ.ர. கோவிந்தசாமி, அ. க. துரைராசு.

குழுக் கூட்டம்

"கரூர் நகர தி. மு. க. செயற்குழுக கூட்டம 26—11—68 மாலை 3-மணிக்கு மேட்டுத் தெரு பூஞ்சோலை செட்டியாா திருமண மணடபத்தில நடைபெறும" என்று செயலாளர் என். ஆா. இராமசாமி அறிவிக்கிறார்.

மாநில வீட்டு வசதி வாரியம்

(செல்லுலர் காங்கிரீட் திட்டம்)

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

Ref. No. 4695/CCP I/68

கீழ்க்காணும் வேலைக்கு, வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின் மீது முறைப்படி குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டுள்ளவரிடம் 11—12—1968 மாலை 3 மணிக்கு மேற்படாமல் வந்துசேருமாறு வரவேற்கப்படுகின்றன, அதே நாள் மாலை 3-05 மணிக்கு, நேரில் வருகின்ற ஒப்பந்ததாரரின் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறந்து பார்க்கப்படும்.

வேலையின் பெயர்:

எண்ணூரில் செல்லுலர் காங்கிரீட் திட்ட ஊழியர்களுக்கான வீடுகள் பின்காணுமாறு கட்டுதல்:—

1) S.H.B./B.P. எண் I.D./68 பிளாச்குகள் 3.
2) S.H.B./B.P. எண் IA/68 பிளாக்குகள் 2.
3) S.H.B./B.P. எண் 2/68 பிளாக் 1.

வேலையின் தோராயமான மதிப்பு	ரூ. 1,32,180
பொறுப்புத்தொகை	ரூ. 1,985
ஒப்பந்த முறை	L. S.
ஒப்பந்த நமூனக்கள் விலை	ரூ. 10+விற்பனை வரி (திரும்பப்பெற முடியாதது)

ஒப்பந்த விதி முறைகள் மற்றும் தொடர்புடைய விளக்கங்களை, சென்னை-35-ல் உள்ள மாநில வீட்டு வசதி வாரியத்தில் செல்லுலர் காங்கிரீட் திட்ட அலுவலகத்தில் திட்ட அதிகாரியிடமிருந்து 29—11—1968-க்குப் பிறகு எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணிமுதல் மாலை 3 மணிக்குள் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒ-ம்) ஈ. டி. ஜெயராமன்
(தலைவருக்காக)

36, மவுண்ட்ரோடு,
நந்தனம் அஞ்சல், சென்னை-35
நாள்: 21—11—1968

சென்னை 57-வது வட்டம் கலைஞர் கருணாநிதி மன்றம்

சென்னை பன்னீர்செல்வம் நகர் கலைஞர் கருணாநிதி மன்றத்தின் நிரவாகிகள தேர்தல், வட்ட மாநகராட்சி உறுப்பினர் ப. கு. மலையப்பன தலைமையில் நடைபெற்றபோது தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்:—

தலைவர்: வ. மகாதேவன்; துணைத் தலைவர்: கோ. வேலுமணி; செயலாளர்: இரா. பாண்டியன்; துணைச்செயலாளர்: து. திருநாவுககரசு; பொருளாளா: துரைசாமி; செயறகுழு உறுபபினாகள்: மா. மணி, ரா. மணி, ஆர். நடராசன், க. நடராசன், ரா. சீனுவாசன், வ. குருநாதன, குமார்.

(3-ம் பத்தி தொடர்ச்சி)

தகவல்களைச் சொல்லி உதவும்படிக் கோரப்படுகிறது.

மீண்டும் 20—12—68 முதல் 4—1—69-வரை எந்த ஒரு நாளிலாவது வீட்டுககு வந்து கணக்கெடுபபுப் பணியாளர் புது உணவுப் பங்கீடடு அட்டையை வழங்குவாா; அப்பொழுது பழைய அட்டையை அவரிடம் கொடுதது விட்டுப் புதிய அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய உணவுப் பங்கீட்டு அட்டையைப் பெற்றுககொண்ட ஒரு வார காலத்துக்குள அதை அவர் விருப்பதது க்கிணங்க, யாராவது ஓா அனுமதிக்கப்பட்ட வணிகரிடம பதிநதுகொள்ளலாம்.

புதிய உணவுப் பங்கீட்டு அட்டைகள் 15—1—69 முதல் செல்லுபடியாகும்.